NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 15 June 2016

# ஆசியாவில் என்யுஎஸ் தொடர்ந்து முன்னிலை

ஆசியாவில் சிறந்த பல்கலைக் கழகங்களின் வரிசையில் சிங்கப் பூர் தேசிய பல்கலைக்கழகம் தொடர்ந்து 3வது ஆண்டாக முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

அதே சமயத்தில் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஓரிடம் முன்னேறி 3வது இடத் தைக் கைப்பற்றியிருக்கிறது.

சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக் கழகம் முதல் முறையாக பல்கலைக் கழகங்களின் வரிசையில் இடம் பிடித்து 60வது இடத்தில் வந்துள் ளது.

ஹாங்காங் பல்கலைக்கழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது.

லண்டன் நகரைத் தளமாகக் கொண்டு செயல்படும் கல்வி, வேலை வாய்ப்பு ஆலோசனை நிறு வனமான குவாக்குவாரெலி சைமண்ட்ஸ் வெளியிட்ட பட்டிய லில் இந்த வட்டாரத்தில் உள்ள 350 சிறந்த பல்கலைக் கழகங்கள் வரிசைப்படுத்தப்பட்டன.

இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50 பல்கலைக் கழகங்கள் கூடுதலாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.